உ

கடவுள் துணை.

அகஸ்தியமகாமுனி அருளிச்செய்த

பக்ஷிதோஷம், பாவைதோஷம், எக்ஷிதோஷம். தேரைதோ
ஷம், புருஷதோஷம், பெண்தோஷம், குளிதோஷம்,
குளித்தவள் எடுத்ததோஷம், கெற்ப மழிந்ததோ
ஷம், விபூதிபிடிக்க மந்திரம், கட்டி, சிலந்தி
கட்குமந்திரம், தண்ணிவோதுமந்திரம்
பூச்சிகடியிறக்கமந்திரம், முடிகய
ருகட்டுமந்திரமும், இதற்கு
சக்கரங்களும்அமைந்த

சகலதோஷநிவர்த்தி

செஞ்சி - ஏகாம்பரமுதலியாரால்பாடலாகவியற்றப்பட்டு.

பூவிருந்தவல்லி

சுந்தரமுதலியாரது

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1894.

இதன்விலை அணா - 1.

உ

கடவுள் துணை.

மாந்திரவாதி. தாயார் குழந்தை.

சகலதோஷநிவர்த்தி.

விநாயகர் துதி.

கலிவிருத்தம்.

பாலர்தோஷம் பறந்திடவேயருள்
ஞாலமீது நயம்பெறவோதிட
காலகாலனைக் காய்ந்தசிவனருள்
கோலமாமுக குஞ்சரன்காப்பதாம்.

நான்முகம்விருத்தம்.

சீராரும்பாலருக்கு பலதோஷந்தான்
சிக்கியதுபறந்தோட சஞ்சீவிகேள்
பேராரும்அகஸ்த்தியரும் புகன்றவாக்கு
பூலோகமுள்ளளவும் பொய்த்திடாது
தாராரும்வுலகோர்க்கு வேணுமென்று
தம்பியடாகைமுறையை வெளியாய்சொன்னேன்

ஆராய்ந்து புத்திதனில் அறிவாயாகில்
அப்போதே பறக்குமடா சகலதோஷம்.

இதுவுமது.

பறக்குமடா பக்ஷியுடன் பறவைதோஷம்
பாழானயெட்சியுடன் தேவரைதோஷம்
வறுமையடா குளிதோஷம் புருஷதோஷம்
வாட்டுமொருகுளித்தெடுத்த கன்னிதோஷம்
கருவழிந்ததோஷமுடன் யிவைகளெல்லாம்
கண்ணான குழந்தைகட்கு சிக்குமாகில்
உறுகொலைக்கும் பொல்லாத தோஷந்திர
ஓதுகுறேன் சாந்தியதின் உண்மைகாணே.

பக்ஷிதோஷம் செய்யுங்குணம்.

தண்ணீர்போல்கழியுமப்பா வாந்திபண்ணும்
தலைபளுவோடிறு கண்ணில் பீளைஜாடும்
பண்ணவே மெய்வெதும்பி பேய்போல்சீறும்
பதறியழும்முகம் சிருக்கும் பாலுண்ணாது
கண்குழியும் குறள்கம்மும் கழுத்தும்வீங்கும்
கனவு கண்டாற்போலலரும் நீருண்ணாது
விண்டயிந்த பக்ஷியுட தோஷந்திர
விளம்புகுறேன் சாந்தியது செய்துதீரே.

(இ-ள்) பக்ஷிதோஷத்தின் குணம் தண்ணீர்போல் கழியும் வாந்திபண்ணும் தலைபளுவா யிருக்கும் கண்களில் பீளைசேரும் திரேகம்வெதும்பும் பேய்போலே சீரியழும் கண்குழியும் கழுத்துவீங்கும் முகம் சிருக்கும்குறள்கம்மும் அடிக்கடி யலரும்பால் தண்ணி யெதுவும்உண்ணாது அதற்குச்சாந்திசொல்லுகுறேன் கேளும்-எ-று.

பக்ஷிதோஷ பரிகாரகுளிசமும் மருந்தும்.

பக்ஷியின்தோஷந்தீர பனையின்வேர் குளிசமாடி
கச்சிதமணத்தக்காளி உகந்திடும்வேரோடுள்ளி
பிச்சியின்வேரோடெண்ணை பிசைகதிர்புடமேசெய்து
உச்சியில்யிட்டுபின்னும் உள்ளுக்குங்கொடுத்திடாயே.

(இ-ள்) ஆதிவாரத்தில் பனமறத்தின்வேருக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி வேர்கொண்டுவந்து பிறகு செப்புத்தகட்டில் அடியில்கண்டிருக்கும் சக்கரத்தையெழுதி வேருடன் குளிசத்தில் போட்டு தூபதீபம்கொடுத்து சொல்லும் மந்திரம்-சிங் கிரீயும் ஸ்ரீயுஞ்-சவ்வும்-ஐய்யும்- சுவாகவென்று நூத்தியெட்டுதரம்சொல்லிகுழந்தைக்கு கட்டவும் பிறகு உளுந்தோடு பச்சரிசிபோட்டு பொங்கி ஒருசட்டியில் யெருக்கன்யிலைபோட்டு அதில்யிந்தசாதத்தை வைத்து அதின்மேன் மாவு அகல்மூன்றுசெய்து தீபம்யேற்றி முன்சொன்னமந்திரத்தை நூத்தியெட்டுசெபித்து குழந்தைக்கு ஒன்பதுதடவை சுற்றி முச்சந்தியில் வைக்கவும் நிவர்த்தியாகும், பிறகு மணத்தக்காளிவேரும் வெங்காயம்பிச்சிவேரும் யெண்ணையும்யிதுகளெல்லாம் வொன்றாய்கலந்துவெய்யலில்வைத்து யெடுத்து குழந்தையின் உச்சியில் தடவி உள்ளுக்கும்கொடுக்க சகலதோஷந்தீரும்-எ-று.



பறவைதோஷஞ் செய்யுங்குணம்,

குடித்தப்பால்யெடுத்துநெற்றி வலிப்புண்டாகும்
குரிகிர்த்திரை செய்தலரி வலிபோல்காணும்
அடிக்கடிக்கு நீர்கேழ்க்கும் கையில்தங்கா
தாகுமப்பா மஞ்சள்நிற மாகபேதி
எடுக்கவேநாவரக்ஷி கண்வெளுக்கும்
இருக்குமப்பாஉச்சிபள்ள முகம்வெளுக்கும்
கடுக்குமேநெஞ்சிசுழி வாங்கும்பாறு
கருமமாம்பறவையுட தோஷத்தாலே.

(இ-ள்) பறவைதோஷமாகில் உடம்புநோகும் பால்தக்காது நெஞ்சிசுழியும் தலைநோயுண்டாகும் நித்திரையில் அலரி சிரும்தாகம்யெடுக்கும் கையில்தங்காது உச்சிபள்ளமாகும் திரேகம்வெதும்பும் மஞ்சள்போல் பேதியாகும் இரண்டு கண்ணும் வெளுக்கும் யிதுபறவைதோஷமாகும்,

பறவைதோஷபரிகாரமும்மருந்தும்.

பறவையின்தோஷம்தீற பயனுரைத்திடுவேனிந்த
துரையைநீகேளாய்ஆலில் துளிர்தனைக்குளிசமாடித்
திறமைசிறகம்யீறுள்ளித் திகழ்வரப்பூலாவேறும்
உறவதாய்காச்சியேதான் உருபிணிகுழவிக்கியே,

(இ-ள்) செவ்வாய்க்கிழமை ஆலன்துளிருக்கு காப்பு கட்டி கொண்டுவந்து அடியில் கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத் தகட்டில் யெழிதி வேரைதகிட்டில்வைத்து குளிசமாடி தூப தீபங்கொடுத்து குழந்தைக்குக் கட்ட பறவைதோஷம் நிவர்த்தியாகும் பிறகு-சிரகம்-வெங்காயம் பூலாவேரும் இந்தமூன்றும்சலம்விட்டு காச்சிகுடுக்கவும் யிதர்க்குமந்திரம் பக்ஷிதோஷத்திற்கு சொன்னதை சொல்லவும்-எ-று.

ஹ்லி ஹ்லி ஹ்லி
ஷ ந ஷ ெ கூ ஹ
மு ஹ்லி ம

எக்ஷிதோஷஞ்செய்யுங்குணம்.

மெய்யதுவும்மிகஊறும் பாலைநீக்கும்
மாதர்மேல்தான்வெறுக்கும் பேதியாகும்
துய்யனவேகண்மூடி பீளைகட்டும்
தொந்திரவாம்சொரமடிக்கும் பேதியாகும்
கையொதிரிபதரியமும் சன்னிநோய்போல்
கண்கள்ரெண்டும்பிசைபிசைந்து உடலும்வற்றும்

வையகத்துபாலருக்கு கர்மநோயாய்
வாய்க்குமொருயெக்ஷியுட தோஷம்பாரே,

(இ-ள்) எட்சிதோஷமாகில் உடம்புநாறும் பால் மறந்திருக்கும் தாயார்மேல் வெறுக்கும் வயர்கழியும் சுரமடிக்கும் கண்ணைபிசபிசைந்து பூமியில் புறண்டு அழும் கண்ணில் பீளைசேர்ந்து கண்மூடும் சன்னியைபோல்வலிக்காணும் திரேகம்யிளைக்கும் யிந்தபடி எட்சிதோஷகுணம்-எ-று.

எக்ஷிதோஷபரிகாரக்குளிசம்.

தானேதான்சுக்கிற வாரந்தன்னில்
தப்பாமல்அழுக்கராம்வேர் காப்புகட்டி
தேனேநீ-ம-ந-சி-வ-ய-வென்றும்
தம்பியடாநூற்றியெட்டு உருவேயீந்து
பானுகபுட்டில்வேரை குளிசமாடி
பழங்கதலிபடைத்துநீர் வோதியிய்ந்து
தானுககுளிசமதை பாலனுக்கும்
தரித்தவுடன்யெட்சிதோஷம் தங்காதோடும்

(இ-ள்) வெள்ளிக்கிழமையில் அழுக்கரான்வேறு காப்புகட்டிசொல்லுமந்திரம்-ம-ந-சி-வ-ய-யென்று நூற்றியெட்டுநடவை சபித்து அதின் வடக்குவேரை கொண்டுவந்து அடியில் கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத்தகட்டிலெழிதி வேரைதகிட்டில்வைத்து அதின்மேல்பட்டுச்சீலே குளிசமாடி பிறகுதாம்பூலம்வெல்லம் வாழைப்பழம் கற்பூரம்சாம்பிறுணிதுபதீபம்கொடுத்து முன்சொனன மந்திரத்தை நூத்தியெட்டுநேரம் ஜபித்து பிறகு சொம்பில்ஜலம்கொண்டுவந்து குழந்தைக்கு ஓதி தெளித்துபிறகு யிந்தகுளிசத்தை கட்டவும் யெட்சிதோஷம் நிவர்த்தியாகும்-எ-று.



தேரை தோஷம் செய்யுங்குணம்.

பாரப்பாதேரையுட தோஷத்தாலே
பாலருக்குமெய்சோர்ந்து கைகால்நோஞ்சும்
பாரப்பாவயர்புடைக்கும் மலமுந்தீயும்
பாலதுவுங்குடியாது தண்ணீர்கேட்கும்
பாரப்பாமூச்சிவிடும் குரல்வேறாகும்
பண்பானசெவிதாழும் வெரிபோல்காணும்
பாரப்பாகட்டிபோட்டா போலும்பிள்ளை
பதறசெய்யுந்தேரையுட தோஷந்தானே.

(இ-ள்) தேரைதோஷமாகில் திரேகம்யிளைக்கும் கைகால் நோஞ்சிபோகும்வயர்நோகும் மலம்யிருக்கிவிடும் பால்குடியாது தண்ணீர்தாகமெடுக்கும் பெருமூச்சிவிடும் குறள் வேறாகும்காதுதாழும் மேனிவெளுக்கும் வெரிபோல்காணும் பிள்ளைகட்டிபோட்டாப்போல் குந்தினயிடம்விட்டு நகராது முகம்வாடிப்போகும் எ-று.

தேரைதோஷநிவர்த்தி மருந்து,

சிறுகீரை நீராரை தண்டு நீர்முள்ளி காட்டுமல்லி அவுரிகருசணாங்கண்ணி யிந்தஆறும் ஓரிடையாகசமூலம்சேர்த்து முடக்கத்தான்வேர் கொஞ்சம்சேர்த்து மூணுழாக்கு தண்ணியில்இதுகளெல்லாம்போட்டு நாலிலொருபங்காக யிறக்கி வைத்துக்கொண்டுபிறகு அதிமதுரம் திப்பிலியேலம் யிம்மூன்றும்ஓரெடையும் சுக்குகால்பலமும் யின்னான்கும்பசும்பாலில்அரைத்துகியாழமும் யிந்தமருந்தும் வொன்றாய்க்கலந்து யிருநாழிநெய் வார்த்துகாய்ச்சி யிருத்துக்கொண்டு குழந்தைக்குவேளைக்குசிறுகரண்டிகொடுக்க தேரைதோஷம் குளிதோஷம் யிரண்டும்பறக்கும் தாயாருக்குயிச்சாபத்தியம் வைக்கவேண்டியது.

புருஷதோஷஞ்செய்யுங்குணம்.

போமேயுச்சிக்கண்சுழியும் பொருந்துண்பாலுந்தங்காது
போமேவயிறும்பச்சென்றுப் பொரிமியமூகும்பறவைகுறள்
தாமேகுருகும்ஒருவேளைத் தனியேதனியேசீரியமும்
காமேகருத்தக்குழியாளே கருவால்புருஷதோஷமதே,

(இ-ள்) புருஷதோஷமாகில் உச்சிபள்ளம்விழும் கண்சொழலும் உண்ணபால்தங்காது பச்சையாய்கழியும் குறள்கம்மியழும் வேளைக்குவொருவிதமாய் அலரியழும் எ-று.

புருஷதோஷத்திற்குப்பரிகாரம்.

புருஷனென்றஉடும்பினுட நாக்குவாங்கிப்
புகழானயெருக்கநார் குளிசமாடி
புருஷனென்றதாம்பூலம் முன்னேவைத்துப்
புதுமையாய்பூசைசெய்ய சொல்வேன்கேளு
புருஷனென்றநயவசிம நூற்றெட்டோதி
பூமாலைபாய்பாலர்க்குக் கட்டு கட்டு
புருஷனென்றகுழந்தைகட்குக் கட்டும்போது
புகழ்பலிவோணுன்கொடுக்க தோஷம்போமே

(இ-ள்) பிதற்குப்பரிகாரம் ஆண் வுடும்புநாக்கு கொண்டுவந்துஅந்தநாக்கை யெருக்கன்நாரில்கட்டி அடியிற்கண்ட சக்கரத்தையெழுதிவைத்து தாம்பூலம் புஷ்பம்வைத்து தூபதீபங்கொடுத்து சொல்லுமந்திரம் நயவசிம யென்று நூற்றியெட்டுதரம் செபித்து ஓணுன்பலிகொடுத்து குழந்தை கழுத்தில் மாலையாககட்ட சகலதோஷம்நிவர்த்தியாகும்-எ-று.

ந	சி	ழ்	அ	எ	ந	க	ய
கா		பூ	ழ	ல	ல	எ	ற
லெ		எ	ப	சு	ழ்	மி	ம

பெண்ணின்தோஷம்செய்யுங்குணம்;

நெஞ்சதுவும்வரண்டுபெரும் மூச்சிகாணும்
நேர்விழியுந்தான்வெளுக்கும் பாலுண்ணாது
துஞ்சாதுயிரவுபகல் திரேகம்வேர்க்கும்
தோஷமதுவரும்விபரம் சொல்லக்கேளு
ஆஞ்சானகருகலைந்து தாயைபார்க்கில்
அவன்தனக்கும்வயற்றுவலி சுளுக்குமுண்டாம்

பஞ்சவசமோல்முகங்கருகி பேய்போல்நிற்கும்
பகுத்தறிவீர்பெண்ணினிட தோஷமென்றே.

(இ-ள்) பெண்தோஷமாகில் நெஞ்சிவரண்டுபோகும் பெருமூச்சிவிடும் கணவெளுத்துபோகும் பாலுண்ணாது நித்திரைகொள்ளாது திரேகம்வேர்க்கும் யிந்ததோஷம் உண்டாகும்விதம்யெவ்விதமென்றால் அஞ்சிமாதகேர்ப்பத்தில் கலந்து தாய்முகம்கண்டால் அந்தபிள்ளைபிறந்தால் சுறுக்கும் வயற்றுவலியுமாய் யிருக்கும்-எ-று.

பெண்தோஷபரிகாரம்.

செய்யவேபஞ்சவர்ன மலரெடுத்துச்
சேகரமாய்பஞ்சவர்ன மானஅன்னம்
ஐயமில்லாஐந்துவெள்ளி பணமும்வைத்து
அதனுடன் தூபதீபம் நெய்விளக்கும்
வைக்கதலியிலையில்உரு யெழிதிதானே
வரைதோறும்சாம்பராணி வத்திநட்டு
பொய்யல்லநான்சொன்னேன் பண்டிதற்கு
பொதுவாகமுச்சந்தி யதில்வைப்பீரே.

(இ-ள்) அஞ்சிவர்னநாலும் அஞ்சிவர்ன சாதமும் ஐந்துவெள்ளியும் யிம்மூன்றும்சட்டியில்வைத்து தூபதீபம் நெய்விளக்கேற்றி வாழைப்பழத்தில் உருவுசெய்து அந்தஉருவுமுழுமையும் சாம்பிராணிவத்தி சொரிகி பிறகு நயவசியமயென்றுநூற்றியெட்டுசெபித்து குழந்தையை சுற்றிமுச்சந்திவீதியில் வைக்கவும் பெண்தோஷம் நிவத்தியாகும்-எ-று.

ந	ஷ	சு	ஷ
கூ		ஐ	

மூட்டுதோஷம்செய்யுங்குணம்.

போமென்றகுழந்தைமேனி பொன்னிறம்வாடிவேறாய்
தாமென்றவயுத்தில்பாலுந் தங்காமல்வாயால்போகும்

நாமென்றகண்குழிந்து நாக்குவாய்கரிகித்தோன்றும்
காமென்றமாதவிடையின் கன்னியரெடுத்தகூரே.

(இ-ள்) முட்டுதோஷமாகில் திரேகம்வாடி வேறுபடும்பால் தங்காமல் வாயால்கக்கிகொண்டேயிருக்கும் கண்உள்ளே இழுக்கும் வாயும்நாக்கும் கரிகியிருக்கும் மாதவிடாயுள்ள ஸ்ரீகளொடுத்தால் யிவ்விதமென்று அறிவீர்கள்-எ-று.

முட்டுகுணதோஷம்நிவர்த்தி.

கூரானமுன்சொன்ன மந்திரந்தான்
குளிர்ந்தசலம்மொண்டுவேப் பிலையாலோது
ஊரானதாய்பிள்ளை யிருவருக்கும்
ஓதியேயிருவேளை சாந்திசெய்நீ
சீரானதிப்படியே யேழுநாள்செய்
சிவசிவாபறந்தோடும் தோஷங்காணும்
வோரானமந்திரமே யதில்வேரில்லை
வெகுவானநோயெல்லாம் வோடிப்போமே

(இ-ள்) குளிர்ந்தசலங்கொண்டுவந்து வேப்பிலையெடுத்து அதில்தோய்த்து தாயாருக்கும்பிள்ளைக்கும்முன்மந்திரத்தைசொல்லி யேழுநாளைக்குயோதவும் பிறகுபஞ்சவர்ன சாதமும்யெலுமிச்சம்பழமும் சுத்தி யெட்டுநாளைக்குபோடவும் அடியில்கண்டசக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி கட்டவும் தோஷங்களெல்லாம் பறந்துவோடும் எ-று.



குளிதோஷம்செய்யுங்குணம்

உச்சியதுகுழிந்துகண் வளையமாகும்
ஓங்கியேபேதியுடன் வேர்வைகாணும்
பச்சையாய்ப்பலவர்ண காச்சலுண்டு
பறக்குமப்பாசுரமுடனே குய்யம்புண்ணாய்
இச்சையாய்நீர்குடித்தும் நெஞ்சுலறும்
யென்சொல்வேன்மெய்சோர்ந்து கைகால்வீங்கும்

அச்சமதுகொள்ளாதே அப்பாகேளும்
அரிவையர்கள்குளிதோஷம் அரிந்துகொள்ளே

(இ-ள்) குளிதோஷமாகில் உச்சிபள்ளமாகும் கண்சொருகும்பேதிபலவர்ணமாகும் சுரமடிக்கும் குய்யம் புண்ணாகும்தண்ணீர்தாகமெடுக்கும் நெஞ்சுலரும் திரேகம்யிளைக்கும் கைகால் வீங்கும் யிப்படியிருக்குமாகில்குளிதோஷமென்று அரிவீர்கள்,

குளிதோஷத்திற்கு சகலஸ்தானமும்.

தோஷமதுதழுதாழை குட்டிவிளாவேம்பு
சோம்புமஞ்சள்வசம்புடனே சுக்குங்கூட்டி
வாசமிதுஅரைப்பரைத்து வைத்துக்கொண்டு
வாகையிலைபோட்டுநீர் காச்சிக்கொண்டு
தேசமிதுதாய்பிள்ளை யிருவருக்குந்
தேய்த்துமேமுழுக்காட்டி சொல்லுவேன்கேள்
பாசமதுமுக்கணத்தில் தண்ணீர்மொண்டு
பசுமஞ்சளரைத்ததிலே கலக்கிடாயே.

(இ-ள்) தழுதாழையும் குட்டிவிளா யிலையும் மலைவேம்பும் சோம்பும் மஞ்சள் வசம்புசுக்கு யிந்தயேழுதினுசும் அரைப்பரைத்துவைத்துக்கொண்டு பிறகுதண்ணீரில் வாகயிலை போட்டுகாச்சி தாய்பிள்ளையிருவருக்கும் முன்அரைத்தஅறப்பைதேய்த்து காய்ச்சினசலத்தில் ஸ்தானம்செய்தபிறகு வேரை மூன்றுகணத்தின் சலம்கொண்டுவந்து மஞ்சளரைத்து அதில்கலக்கிவைத்துக்கொண்டு சொல்லும்மந்திரம் கேளும்-எ-று.

குளிதோஷநிவர்த்தி.

கலக்கியடாமஙஸ்ரீயும் ஐயும்சவ்வும்
கண்மணியேஅருகாலை நூற்றெட்டோதி
வலக்கிடாய்மேல்தெளித்து கடுகவாறு
வாசமுருந்திரேகமோ பசும்பொன்வீசும்
அலக்கிடாசூரிவேர் பிடிங்கிவந்து
அன்பாகமஞ்சள்நூல் குளிசமாடி
மலக்கிடாய்பாலனுக்கு கட்டிபோடு
மகத்தானகுளிதோஷம் பறந்துபோமே.

(இ-ள்) மங்ஸ்ரீயும் ஐயும் சவ்வும் யென நூற்றியெட்டு ஓதி தாய்பிள்ளை யிருவருக்கும் தெளித்து ஸ்தானம்செய்யவும் இப்படி ஆருநாளைக்குசெய்ய திரேகம் பொன்னிறமாகும் யிதற்கு குளிசம் சூரிவேருக்குகாப்புகட்டி பிடிங்கிவந்து மஞ்சள் நூல் சுற்றி தூபதீபம்கொடுத்து முன்மந்திரத்தை நூற்றியெட்டுசபித்துகுழந்தைக்குக்கட்ட குளிதோஷம் நிவர்த்தியாகும்-எ று

குளிதோஷத்திற்கு மருந்துங்குளிசமும்.

சொரிந்தாவின்நெய்உரியில் நல்லெண்ணெபாதி
சோகமானநன்னாரி தண்ணீர்விட்டான்
கறந்தைபொன்னாங்கண்ணியுமே பலமொன்றாகக்
கழிஞ்சியேலரிசிச் சீரகமுங்கூட்டிப்
பொருந்தவேஆவின்பால் விட்டரைத்துப்
புகழடுப்பில்யேற்றியே காச்சிக்கொண்டு
திருந்தவேகுளிதோஷம் போவதற்கு
சிறுகரண்டிபுகட்டிடவே தெளியுங்காணே,

(இ-ள்) பசுநெய்யும் நல்லெண்ணெயும் சரியிடைவாங்கிபிற குநன்னாரிவேரு தண்ணிவிட்டான்கிழங்கு கறந்தைபொன்னாங் கண்ணி யிந்தநாலும் தினுசுக்குஒருபலம்வாங்கிவைத்துக்கொ ண்டு கழஞ்சுயேலரிசி சீரகம் ஆகயேழுதினுசையும் பசும்பால் வார்த்து அரைத்து மேற்படிநெய்யெண்ணெயில் யிந்தமருந்தை கலந்து அடுப்பில்யேற்றி பதமாககாச்சியிரைக்கிகொண்டுகுழந் தைக்குசிறுகரண்டியளந்து கொடுக்க குளிதோஷம்பறக்கும்.

குளித்தவள் யெடுத்ததோஷம் செய்யுங்குணம.

மேனியதுமிகவாடும் பால்தங்காது
மெலிந்துவுச்சிபள்ளமுடன் கழிச்சல்நீராய்
பிணியெனவேர்க்கும்நெற்றி விழிகள்தாழும்
புகலும்வாய்தான்கருக்கும் மூக்குவேர்க்கும்
விளையடாகால்பின்னும் அழுதும்சீறும்
வேளைக்கோர்விதமாக பேதியாகும்
அனியாயம்குளிந்தவள் யெடுத்ததாலே
ஆகுமிந்தசெய்கையொன்று அரிந்துகொள்ளே.

(இ-ள்) திரேகம்வாடும் பால்தங்காது உச்சி பள்ளமாகும் த ண்ணீர்போல்கழியும் நெற்றிவேர்க்கும் விழிசுழலும் மூக்குவே ர்க்கும்கால்பின்னும் சீரியழும்மணிகரைக்கண்டால்தாவும்இது குளித்தவள்யெடுத்ததோஷம் எ-று.

குளித்தவள்யெடுத்ததோஷபரிகாரம்

கட்டுவாய்திருகுகள்ளி வடக்குவேரை
காப்பிட்டுநாயருணுள் பிடுங்கிவந்து
சூட்டுவாய்குளிசமுடன் நீர்சொரிந்து
சோகமாககட்டிடவே நோய்கள்தீரும்
மட்டாகமூன்றுநாள் நீர்சொரிந்து
மதனைக்குச்சாந்திசெய்ய மயக்கம்தீரும்
தொட்டிருந்ததோஷமெல்லாம் துடித்தேயோடும்
சொன்னபடிகுளிசமும்நீர் சொரிந்திடாயே.

(இ-ள்) நாயிற்றுக்கிழமையில் திருகுகள்ளிச்செடியின் வடக்குவேருக்குகாப்புகட்டி பிடிங்கிவந்துமஞ்சள்நூலில்சுற்றி அடியில் கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத்தகட்டி லெழுதி தூபதீபம்கொடுத்து சொல்லும்மந்திரம் மங்ஸ்ரீயும் ஐயும் சவ்வும்மென்று நூற்றியெட்டுஜெபித்து குழந்தைக்குகட்டவும் பிறகுயிந்தமந்திரத்தைசொல்லிசலம்வோதி மூன்றுநாள்ளரைக்கமயக்கந்தீரும் யிதற்குசாந்தி ஐஞ்சிவர்னசாதம் சுற்றிபோடவும்,



கெர்ப்பமழிந்ததோஷ குணம்,

குடித்தப்பால்தங்காது திரேகம்நாறும்
குழவிநெஞ்சுஅண்ணூறும் மெலிந்துதானும்
பிடித்தாப்போல்கால்பின்னி கழியும்பாரு
பிள்ளைமுகம்வெருகி விழியுஞ்சோரும்
துடித்திடவேமெய்சிவக்கும் மயக்கங்காணும்
தோஷமென்றயிச்செய்கை கண்டையானல்
யெடுத்துக்கொள்கருஅழிந்த தோஷமென்று
யிச்செய்கைகண்டிருக்கும் பாலருக்கு.

(இ-ள்) கெற்பமழிந்ததோஷமாகில் குடித்தபாலும் தங்காது திரேசம்நோகும் நெஞ்சிவீங்கும் புண்ணாகும் திரேகம் நாறும் கைகாலில் அழுக்கேறும்கால்பின்னும் உடம்புயிளைக்கும்பேதியாகும் மெய்சிவக்கும் விழிசோரும் மயக்கங்காணும்-எ-று;

கெர்ப்பமழிந்ததோஷத்திற்குபரிகாரம்குளிசமும்,

கெர்ப்பமழிந்ததோஷத்தின் கிலேசந்தீரக்கிரிகைகேள்
கர்ப்பக்காட்டாத்திபின்வேரை கதிக்கவேகுளிசம்செய்து
அப்பப்பரித்திவேர்அரைத்து அருந்தக்குளிர்ந்தத்தண்ணீரை
கர்ப்பனைபின்வெல்லமதை கரைத்துநீரில்கொடுத்திடுமே,

(இ-ள்) காட்டாத்திவேருக்கு காப்புகட்டி பிடிங்கிவந்துமஞ்சள்நூல்சுற்றி தூபதீபங்கொடுத்து இதில்கண்ட யெந்ததோஷமந்திரமாவது நூற்றியெட்டுதரம்செபித்துகுழந்தைக்குக்கட்டவும்பிறகுபரித்திவேர் அரைத்துகுளிர்ந்ததண்ணீரில்கலக்கிபனைவெல்லம்போட்டுகுடிப்பாட்டசகலதோஷமும்நிவர்த்தியாகும்.

விபூதிபிடிக்கும்மந்திரமும்சக்கரமும்

பாலருக்குவிபூதிதனைப் பிடிக்கவேண்டில்
பண்பாகயிதில்சொன்ன படியேகேளு
சாலவேதாம்பாளத்தில் வெண்ணீரிட்டு
சக்கரத்தையெழுதிகூடம் கொளுத்திவைத்து
மேலானஇதில்சொன்ன மூலமந்திரம்
மறவாமல்நூத்தியெட்டு மகிழ்ந்துவோது
வேலவனேயென்றுவிண்ணீர் சிரசிற்போடு
வீரிட்டுவோடுமடா தோஷமெல்லாம்.

(இ-ள்) குழந்தைகள் அந்திசந்திவேளையில் பயந்தாலு[ம் உ]ச்சிவேளையில் அலரிவிழுந்தாலும் ஊர்பயணம் போகும்[போ]து பேய்சேட்டையால் பயந்தாலும் யின்னம் எவ்விததோஷத்தால்பயந்துயிருந்தபோதிலும் ஒருதாம்பாளத்தில்விபூதிபோட்டு அதில்அடியில்கண்ட சக்கரத்தையெழுதி கற்பூரம் கொளுத்திவைத்து சொல்லும் மந்திரம் ஆக்குறசணி உச்சாடு பாலம்தவதா சர்வகிரகங்களும் உன்னைக்கண்டவுடன் உன்னைப் பார்த்தவுடன் உன்பேரைச்சொன்னவுடன் சர்வபூத பிசாசுகளும் ஓயம்மா நேபோயநேயென்று கொக்கரித்து ஐயுங்கிலியும் சவ்வும் மாலமணி சவ்வுங்கிலிம் ஐயும்மாலணி சவவும்மாலமணி நான் நினைத்தகாரியத்திற்கு வந்துநில்சுவாகா யென்று நூற்றியெட்டுதரம் ஜெபித்து பிறகு அந்தவிபூதியை குழந்தை வாயிற்கொஞ்சம்போட்டு சிரசின்மேல் கொஞ்சந்தெளித்து நெற்றியிலிட சகலதோஷமும் பறக்கும் உருகொடுக்கும்போது கற்பூரம் அவியாமல் கொளித்திரவும் பாலர்களுக்கும் பெரியவர்களுக்கும் யாவருக்குஞ் செய்யலாம்-எ-று.

ந	ம	சி	வ	ய
ய	ந	ம	சி	வ
வ	ய	ந	ம	சி
சி	வ	ய	ந	ம
ம	வ	ய	சி	ந

கட்டிசிலந்திகிரந்திபித்துகட்கு நிவர்த்திமந்திரம்,

பொல்லாதகிரந்தியுடன் சிலந்திகட்டி
பாலருக்குசிக்கிவெகு பாதைசெய்யில்

வல்லவனேயிதில்கண்ட சக்கரத்தை
வகையாகசெப்பேட்டில் யெழிதிகேளு
உல்லாசமாய்வுருவு நூற்றியெட்டு
உத்தமனேவோதிபின்னுல் குளிசங்கட்டு
சொல்லாமல்வோடுமடா கிரந்திகட்டி
சுப்பிரமண்ணியர் தன்னுடையகிருபையாலே

(இ-ள்) கிறந்தியாகிலும் செலந்தியாகிலும்கட்டியாகிலும் பாலக்[illegible]க்குகண்டால்அதற்குமந்திரிப்பது யெவ்விதமென்ருல் குழந்[illegible]த தாயின்மடியில் வைத்து கிழக்குமுகமாக குந்தச்சொல்லிவேப்பிலையால் விசுரும்மந்திரம், அகார உகார மகார விந்தா ஆதாய வரப்பிர்மமூர்த்தி யென்னும்வந்த சர்வவிஷங்களும் சர்வகட்டிகளும் சர்வவைப்புகளும் யிதுகளெல்லாம்தரி தரி முரிமுரி தாக்குதாக்கு சர்வபேதபிசாசிகள் நான்கையில்வேப்பலையெடுத்தவுடன் பஞ்சாபறக்க சுவாகா யென்று இந்தப்படி நூற்றியெட்டுதரம் சொல்லி வேப்பிலையால் குழந்தை உச்சியில்யிருந்து பூமியில்மூன்றுதடவையிறக்கி பிறகு நாயிற்றுக்கிழமை யிதில்கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி பழம்தேங்காய் தாம்பூலம் தக்ஷிணைவைத்து நெற்பொரிநவதானியம்முதலானதும் வைத்து முன்மந்திரத்தை நூற்றியெட்டு செபித்து கற்பூரம்கொளித்தி அந்த தகுட்டைகுளிசத்தில்போட்டு குழந்தைக்குக்கட்ட அதன்பிறகு நவதானியத்தை கொழந்தையைச்சுற்றி முச்சந்தில் யெரிந்துவிடவும் சகலமும் நிவர்தியாகும்,

குழந்தைகள்சோக்கம்தீற அறுகோணதண்ணிதோதும்மந்திரம்.

சுத்தசலம்சொம்பிலே கொண்டுவந்து
சுகமானவேப்பிலேயை கையிலேந்தி
பத்தப்பாயிதில்சொன்ன மூலமந்திரம்
பாங்கானநூத்தியெட்டும் பால்மாறுமல்
சித்தமாய்யோதிசலம் முகத்தில்ஜாடு
சிரைகொண்டசோக்கமது பறந்துபோகும்
முத்தியெனஅருகோணம் குளிசமாடும்
முருகருடகடாக்ஷத்தால் பறக்குமப்பா.

(இ-ள்) சொம்பில் புதுசலம்கொண்டுவந்து வேப்பபி[illegible]யை கையில்யெடுத்து சலத்தில்தோய்த்துக்கொண்டு சொல்[illegible]ம்மந்திரம் ஓம்நமோபகவதி சர்வருத்திராணி சர்வபூதபேத [illegible]பிசாசுகளேயும் சர்வஜயன்பிடாரிகளேயும் சர்வகாட்டேரியிரிசிமுதலானதேவதைகளேயும் கட்டுகெட்டுமுட்டுமுட்டு தாக்குதாக்குநான் வைத்தகாரியத்திற்கு உன்திருமங்கிலியம் சாட்சியாய் வறவேணும் ஆக்கிறசு உச்சாடு பேகன்சு சிரந்தஉச்சாடு நான்யெடுத்தவேப்பிலே அதிகசீக்கிரமாக யெறக்கு சுவாகாயென்று நூற்றியெட்டுசெபித்து பிறகுசலத்தை குழந்தைமுகத்தில் மூன்றுதறம்தெளிக்கவும் பிறகு யிதில்கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத்தகிட்டில் யெழிதி கர்ப்பூறம் சாம்பிறுணிகொளித்தி முன்மந்திறத்தை நூற்றியெட்டு உரு[illegible]காடுத்து கொழந்தைக்கு குளிசமாடவும் சகலதோஷமும் நிவர்த்தியாகும்.

பூச்சிகடியிறக்க.

பூச்சிகடித்தவர்களுக்கு மணகட்டும் மந்திரம் சர்வருத்திராணிசர்வவிஷங்களும் சர்வரோகங்களும் சர்வதிவாணங்களும்ச

ர்வங்திகளும் அடி அடி உன்னைபெற்றசிவன் பாதத்நாணையெ ரங்கெரங்கு யென்னைக்கண்டு யென்மூச்சிபட்டவுடன பஷ்கா ரமாய்யெறங்கெறங்ரு நான்கட்டினமன் மாணிக்கமாய் நினைத் து யெறங்கெரங்கு சுவாகா யிந்தப்படி. நூத்தியெட்டு ஜபித்து மண்ணைமுடிந்து கையிற்கட்ட நிவர்த்தியாகும்,

முடிகவருகட்டுமந்திரம்.

தேரையைப்போல் நலியின்றபாலருக்கு
தம்பியடாமுடிகயரு கட்டவேண்டில்
சேராகயிதில்சொன்ன மூலமந்திரம்
சொல்லப்பாமுடிகயறு தவரிடாமல்
நேராகநூற்றியெட்டு தாமேசொல்லி
நம்பியேவெள்ளெருக்கின் கயற்றில்போட்டு
வேராகஆதிவாரம் கட்டிவிட்டால்
பறக்குமடாபாலருடதோஷந்தானே,

(இ-ள்) நாயிற்றுக்கிழமைதினம் வெள்ளெருக்கன்நார் திரித் தவைத்துக்கொண்டு சொல்லும் மூலமந்திரப்படி வொவ்வொ ருமந்திரத்திற்கு ஒவ்வொரு முடிபோடடு ஆயிரத்தெட்டு உரு வுக்கும் ஆயிரத்தெட்டுமுடிபோட்டு குழந்தை அரையில் கட் டவும் சகலதோஷம்நிவர்த்தியாகும் இதர்க்குமூலமந்திரம் கட் கட்கபாலவயிரவா யென்னையும்உன்னையும்பிடித்த யீஸ்பரன்ஆ ணைவிடாதை சர்வவிஷங்களும் நாடாதை சர்வபேதபூத பிசா சுகளும் பறக்க எரிஎரி இட்டநாடாமல் அரிஅரிமன்சிம் சுவா காவென்று நூற்றியெட்டு செபித்துகட்டவும்-எ-று.

சகலதோஷநிவர்த்தி-முற்றிற்று.

விளம்பரம்.

தொடுகுறிசாஸ்திரம்	விஷநிவர்த்தி
[illegible]க்கியம்	மார்க்கண்டன்பூசை, குறத்திசரு
பால[illegible]கதோஷம்	பஞ்சாக்ஷரபதிகம் நடராஜப்பத்து
சகல[illegible]தோஷநிவர்த்தி	தியாகேசர்பதிகம்
1-வய[illegible]தியக்கண்ணாடி 2[illegible]கம்	கபாலீசர்பதிகம்
பார்த்தக[illegible]தி[illegible]லை	நாக்குப்பாட்டு
சிறுத்தொ[illegible]ண்டன்கும்மி	உத்தமிச்சிந்து
மயில்ராவணன்கும்மி	காலேஜ்பத்தியசிந்து
விநோதவிச்சித்திரஜாலம் }	சென்னை ஐகோர்ட்சிந்து
10-பாகம் ஒரேகட்டடம் }	கலியாணச்சிந்து
கெவுளிசாஸ்திரம்	சட்டிகாரன்கடன்சிந்து
தும்மநூல் துடிநூல்சாஸ்திரம்	குடியர்சிந்து
சைவபதார்த்தஞ்சமைக்குமுறை	கலியுகச்சிந்து
களவுநூல்சாஸ்திரம்	காலேஜ்பத்தியசிந்து
திருவண்ணாமலைதீப[illegible]திர[illegible]	[illegible]ணாவீரஅலங்காரம்
வல்லாளமகாராஜன்கும்மி	இ[illegible]அலங்காரம்
நாகூர்ஆண்டவன்கும்மி	வள்ளியம்மன்அலங்காரம்
சிறுத்தொண்டன்சரித்திரம்	[illegible]ரக்கர்அலங்காரம்
தாய்பெண்ணுக்குபுத்திகூறல்	[illegible]சிங்[illegible]ராஜன்அலங்காரம்
மூடமதிதிரவுகோல்	[illegible]ட்டாம்பாகம்

இன்னும்-பலவித நூதனசில்ல[illegible] புத்தகங்களும்பெரியபுத்தகங்களும் சென்னை பெரம்பூர்போஷ்டைச்[illegible]த பெருமாள்பேட்டை வல்லம்பங் காருசெட்டிவீதி 3-வது, நெ, [illegible]ல் ஸ்தாபித்திருக்கும் சுந்தரவிலாச அச்சுக்கூடத்தலைவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வயித்தியரைவேண்டாமல் தாங்களேசெய்துக்கொள்ளத்தகுந்த முன்னூறுமுறைகளடங்கிய (அநுபோகவயித்திய [illegible]பிரம்மரகசியமென்னும்) புத்தகத்தின்விலை அணா-8. வி. பி. பே[illegible]ட்சார்ஜ அணா-2.

பதில்வேண்டுவோர் ரிப்ளேகார்ட் அல்லது ஸ்டாம்ப் அனுப்பவேணும்,

இப்படிக்கு

☞ பூ. சு. குப்புசாமிமுதலியார்.